# அறிவிப்பு

கிருஷ்ணகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவானது சட்ட தன்னார்வலராக சேவை புரிய விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது. கிருஷ்ணகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் 18 நபர்களும். ஒசூர், ஊத்தங்கரை வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் தல 10 நபர்களும், தேன்கனிக்கோட்டை மற்றும் போச்சம்பள்ளி ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு தலா 6 நபர்களும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். விண்ணப்பங்களை கீழ்க்குறிப்பிட்ட தகுதியுடைய நபர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 2021. மார்ச் 1 ஆம் தேதிக்குள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள கிருஷ்ணகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை அடையும் வகையில் அளிக்கவும். மேற்படி சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே. உத்தியோகம் இல்லை. தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த வெகுமானம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்/ பின்வரும் வகைகளின் கீழ் வருபவர்களில் பொதுமக்களுக்கு சேவை செய்ய ஆர்வமுள்ளர்கள் விண்ணப்பிக்கலாம்.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. M.S.W மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி தொழிலாளர்கள்
5. மருத்துவர்கள்
6. மாணவர்கள் மற்றும் சட்டம் படிக்கும் மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞர்களாக சேரும் வரையில்)
7. அரசியல் சாராத சேவை சார்ந்த தொண்டு நிறுவனங்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள்
8. மகளிர் குழுக்களின் உறுப்பினர்கள்
9. நலிந்தவர்களுக்கான சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள்
10. அடிப்படை கல்வி தகுதியுடைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள்

நேர்காணல் தேதி மற்றும் இடம் 2021, மார்ச் 6 ஆம் தேதிக்கு முன் விண்ணப்பதாரரின் செல்போன் எண்ணிற்கு SMS மூலம் தெரிவிக்கப்படும். நேர்க்காணல் 2021, மார்ச் 15 ஆம் தேதிக்கு முன் நடத்தப்படும்/ மற்ற விவரங்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தையோ அல்லது அருகில் உள்ள வட்ட சட்டப்பணிகள் குழுவையோ அணுகவும்.

விண்ணப்பத்தினை கிருஷ்ணகிரி மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் https://districts.ecourts.gov.in/krishnagiri

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி

**செயலாளர்,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**ADR கட்டிடம். ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,**
**கிருஷ்ணகிரி**

18/2/2021

**தலைவர்**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு.**
**கிருஷ்ணகிரி**